மாவட்டத்தினுடைய மையப் பகுதியாக இருக்கக்கூடிய காட்டாத் துறையில் இந்த Serum Analyser என்று சொல்லக்கூடிய instrument-ஐத் தந்து கால்நடைகளைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டு முதல், அந்தந்தப் பகுதிகளிலுள்ள நோய்க் கிளர்ச்சி மற்றும் நோய்த் தாக்கத்திற்கேற்ப கால்நடைகளுக்கு மருந்து விநியோகம் ஒவ்வொரு மருந்தகத்திற்கும் செய்யப்பட வேண்டுமென்று இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுபோல, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான Serum Analyser என்ற அந்தக் கருவி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்கும் வழங்குவதற்கு, வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-ன்கீழ் அறிக்கை

எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா, 'மக்கள் குரல்', 'நமது எம்.ஜி.ஆர்.' மற்றும் 'ஜெயா டி.வி.' மீது எழுப்பிய உரிமைப் பிரச்சினையில், பத்திரிகைகள், தொலைக்காட்சிமீது வலியுறுத்தாதது குறித்த மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் . . . (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2007 அக்டோபர் 19]

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையினை அளிக்கிறேன்:

நேற்றையதினம் 18-10-2007 அன்று சட்டப் பேரவையில், அவை விதி 219 மற்றும் 220-ன்கீழ் தமிழகச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா அவர்கள் என்னைப்பற்றிச் செய்தியாளர்களிடம் கூறும்போது தெரிவித்த சில கருத்துகளுக்காக ஓர் உரிமைப் பிரச்சினையை அவையிலே எழுப்புவதற்குக் கடிதம் மூலமாகத் தங்களிடம் எழுதிக்கொடுத்து, தாங்களும் அதற்கான அனுமதியினை வழங்கி இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறீர்கள்.

முற்பகல் 10-55

அந்த உரிமைப் பிரச்சினை குறித்து என் கருத்துகளைச் சுருக்கமாகக் கூறுமாறு தாங்கள் தெரிவித்தபோது, நான் வாய்மொழியாக, ஜெயலலிதாவின் பேட்டியினை வெளியிட்ட பத்திரிகைகள்மீதும், ஒளிபரப்பிய ஜெயா தொலைக்காட்சிமீதும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டேன்.

பத்திரிகைகள்மீதும், தொலைக்காட்சிகள்மீதும் உரிமைப் பிரச்சினை கொண்டு வருவது என்பது அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றுள்ளது என்றபோதிலும், அது தி.மு.கழகத்தின் கொள்கைக்கு விரோதமானது என்று கழகத் தலைமை அறிவுறுத்தியதன்பேரில், நான் நேற்றையதினம் அவையில் வாய்மொழியாக அந்தப் பத்திரிகைகள்மீது உரிமை மீறல் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதை வலியுறுத்த விரும்பவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நான் எழுதிக் கொடுத்த உரிமைப் பிரச்சினைக்கான கடிதத்தில்கூட இந்தப் பத்திரிகைகள்மீது உரிமை மீறல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவில்லை என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். தாங்களும் இதற்கான தீர்ப்பினைத் தெரிவிக்கும்போது அந்தப் பத்திரிகைகள்பற்றியோ, தொலைக்காட்சிபற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை என்பதையும் தெளிவாக்கி, ஒரு சில பத்திரிகைகளில் அந்த ஏடுகள்மீதும், தொலைக்காட்சிமீதும் உரிமை மீறல் கொடுக்கப்பட்டுள்ளதுபோன்று வந்திருக்கக்கூடிய செய்தி தவறு என்பதை விளக்கிடும் வகையில் இந்த அறிக்கையினை அவையின்மூலம் வெளியிட விரும்புகிறேன். குறிப்பாக, இதுகுறித்து 'இந்து' நாளிதழ்,

பேரவைத் தலைவரிடம், "குறிப்பிட்ட ஏடுகள்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டுள்ளதா?" என்று கேட்டதற்குப் பேரவைத் தலைவர் அவர்களே "ஏடுகள்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்படவில்லை" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார் என்று அந்த ஏட்டிலேயே செய்தி வந்துள்ளது. உரிமைப் பிரச்சினை குறித்து எதிர்க்கட்சியின் சார்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது, அவைக்கு வெளியிலே பேசியதற்கு அவையிலே உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்படுவது சரியல்ல என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், அவையிலே உறுப்பினராகவே இல்லாத 'முரசொலி செல்வம்', ஏட்டிலே எழுதியதற்காகவே அவர்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டு, உரிமைக் குழுவிலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்த அவை வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு கூண்டிலே ஏற்றித் தண்டிக்கப்பட்டார் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

அது மாத்திரமல்ல; கடந்தகால ஆட்சியில்—இன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்மீது அ.தி.மு.க. ஆட்சியில்-- பல உரிமைப் பிரச்சினைகள், அவர் வெளியிலே 'முரசொலி'-யில் எழுதியதற்காகவும், பேசியதற்காகவும் கொண்டு வரப்பட்ட செய்திகளெல்லாம் அவைக் குறிப்பிலே இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, 26-7-2004, 28-9-2005, 23-1-2006 ஆகிய நாட்களில் இப்படிப்பட்ட உரிமைப் பிரச்சினைகள் இன்றைய தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிலே பேசினார் என்பதற்காகக் கொண்டு வரப்பட்டன. அப்பொழுது அன்றைய எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.கழக உறுப்பினர்கள் இதுகுறித்துக் கருத்துகளைக் கூறவே அனுமதிக்கப்படவில்லை. ஆனால், நேற்றையதினம் இங்கே எப்படியெல்லாம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நடந்துகொண்டார்கள் என்பதை அனைவரும் அறிவோம்.

28-9-2005 அன்று இன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்மீது ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டபோது, அன்றைய முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா என்ன கூறினார் தெரியுமா? "இந்த அவையின் உறுப்பினராக இருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஏதாவது கருத்துத் தெரிவிப்பதாக இருந்தால், துணை மானியக் கோரிக்கையின்மீது கருத்துத் தெரிவிக்க விரும்பினால், இந்த அவைக்கு வந்து தெரிவிக்க வேண்டுமே தவிர, அவைக்கு வெளியிலே தெரிவிப்பது, அவதூறாகக்

கருத்துத் தெரிவிப்பது என்பதற்கு உரிமை மீறல் என்ற பிரச்சினையைத்தான் அவர் இங்கே கொண்டு வருகிறார்"—இதை யார் சொல்வது? இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் முன்னாள் முதலமைச்சர் அப்பொழுது முதலமைச்சராக இருந்தபொழுது சொன்னது.

அதைப்போல—"இப்பொழுது நான் முதலமைச்சராக இருக்கிறேன்"—இதுவும் அம்மையார் ஜெயலலிதா சொன்னது; முதலமைச்சராக இருந்த நேரத்திலே சொன்னது: "இப்பொழுது நான் முதலமைச்சராக இருக்கிறேன்; எனக்கும் எல்லாவித உரிமைகளும் உண்டு; ஆனால், இந்த அவைக் கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுது ஏதாவது அறிவிப்புச் செய்ய விரும்பினால், கருத்துக் கூற விரும்பினால், இந்த அவைக்கு வந்துதான் நான் தெரிவிக்க வேண்டுமே தவிர, வெளியிலே தன்னிச்சையாக நான் கட்டுரை எழுதி வெளியிட முடியாது; வெளியே தன்னிச்சையாக நான் பேட்டி கொடுக்க முடியாது". இவ்வாறு அன்றைய அ.தி.மு.க. ஆட்சியில் அப்பொழுது முதலமைச்சராக இருந்தவரும், இன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவருமான ஜெயலலிதா தெரிவித்த கருத்துகள் அவைக் குறிப்புகளிலே இடம்பெற்றுள்ளன என்பதைத் தெரிவித்து, ஜெயலலிதா அவர்களின் அந்தக் கருத்து ஏற்கப்பட்டு, உரிமைப் பிரச்சினைகள் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டதுபோலவே, இப்பொழுதும் நான் அளித்துள்ள உரிமைப் பிரச்சினையும் அவை உரிமைக் குழுவிற்குத் தங்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விடையாக அளித்திட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

3. தகவல் கோரல்

(அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது, பேரவைக் காவலரின் தொப்பியைப் பேரவைத் தலைவரை நோக்கி வீசிய உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் மீது நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மன்றத்தில் அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சார்ந்த